[28th March 1961

Oil-seed crops

* 1122 *Q.*—Sri V. K. KRISHNAMURTHI (on behalf of Sri T. T. DANIEL) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to improve the development schemes for increasing the production of oil-seed crops;

(*b*) whether any Oil-Seed State Committee is formed;

(*c*) if so, the names of the members of the Committee; and

(*d*) the steps taken to prevent a decline in oil yield?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*), (*b*), (*c*) & (*d*) A paper[a] is placed on the table of the House.

Hospitals, North Arcot (bed strength)

* 1123 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வட ஆற்காடு ஜில்லாவில் எந்தெந்த ஆஸ்பத்திரிகளில் படுக்கைகளை அதிகப்படுத்த ஏற்பாடாகியுள்ளது ?

(இ) இவ்வேலை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Construction of additional or new buildings has been sanctioned already with a view to increase the bed-strength of the Government Headquarters Hospital, Vellore, and the Government Hospitals at Cheyyar, Tirupathur and Wandiwash. In the case of the hospitals at Arni, Arkonam, Chengam, Gudiyatham, Polur and Tiruvannamalai, proposals for putting up additional or new buildings or for acquisition of the land required, for the purpose, have not yet been finalised.

(*b*) No, Sir.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், 32 லட்சம் மக்களைக் கொண்ட இந்த ஜில்லாஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி 250 படுக்கைகள் தான் கொண்டதாக இருக்கிறது. 300 பேர்களுக்கு மேல் தரையிலே படுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமையிலே வட ஆற்காடு ஜில்லாவில், வேலூரிலுள்ள தலைமை ஆஸ்பத்திரியில் மேலும் படுக்கைகளை அதிகப்படுத்துவார்களா ? கனம் அமைச்சர் அவர்கள் அந்த ஜில்லாவாசியாகையினாலே, எங்கே அதிலேயே கவனம் செலுத்தி வருகின்றார் என்று சொல்லப் போகின்றார்களோ என்று இதிலே தயங்குகிறார்களா அல்லது வேறு எந்த காரணங்களினால் அது அபிவிருத்தி செய்யப்படாமல் அப்படியே இருந்து வருகிறார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதிலே ஜில்லாவாசியா, இல்லையா என்ற பிரச்னையே எழவில்லை. இப்போது அங்கே 250 படுக்கைகள் இருக்கின்றன. இன்னும் 128 படுக்கைகளை அங்கே சேர்க்க ஏற்பாடாகி வருகிறது.

---

a Printed as Appendix I on page 326 infra.

28th March 1961]

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், குடியாத்தத்திலே ஏற்கெனவே பல ஆண்டுகாலம் மிஷன் ஆஸ்பத்திரி இருந்து வந்தது. அதை 6 மாதங்களுக்கு முன்னால் ஒரேயடியாக மூடிவிட்டார்கள். ஆகவே அங்கே போய்க் கொண்டிருந்த மக்கள் இப்போது சர்க்கார் தலைமை ஆஸ்பத்திரிக்கு வருவதால் நாள் ஒன்றுக்கு 1,000 பேர்களுக்கு மேல் வருகிறார்கள். ஆகவே அங்கேயும் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்தி, அதை படுக்கைகளுடன் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசம் உண்டா? அப்படியானால் எப்போது?

The Hon. Sri M. A. MANICKAVELU: அங்கேயும் 40 படுக்கைகள் வைத்து விரிவுபடுத்துவதற்கு வேண்டிய எஸ்டிமேட்டுகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

Sri V. K. KRISHNAMURTHI: வேலூர் நகரத்தைப் பொறுத்த அளவில் உலகம் புகழும் மிஷின் ஆஸ்பத்திரி தனிப்பட்டவர்களுக்கு உதவும் நிலைமையிலிருக்கிறது. ஆகவே ஓரளவு அதற்குத் தகுந்த முறையிலே இப்போதுள்ள 250 படுக்கைகளை விஸ்தரிப்பதற்கானத் திட்டம் வகுத்து, ஏழை எளிய மக்களுக்கு இலவச உதவி செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அப்படி முன்வந்துதான் இப்போது இந்தப் படுக்கைகளை அதிகப்படுத்துகிறோம்.

Sri V. K. KOTHANDARAMAN: வேலூர் ஆஸ்பத்திரியிலே ஸ்பெஷல் வார்டிலே நான்கு அறைகள்தான் இப்போது இருக்கின்றன. அதனால் பலர் அங்கு வந்து சிகிச்சை பெற முடியாமல் போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த ஸ்பெஷல் வார்டுகளின் எண்ணிக்கையை 20 ஆக உயர்த்துவதற்கு, அந்த முறையிலே அவைகளைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

The Hon. Sri M. A. MANICKAVELU: The suggestion that the quarters for House Surgeons provided for in the 2nd floor of the block be shifted to another place and provision made for another 50 beds is under consideration.

ஏழைகளுக்கு அதிகப்படுத்திய பிற்பாடு, பணக்காரர்களுக்கும் இந்த வசதி செய்யப்படும்.

Harijan students (scholarships)

* 1124 *Q.*—Sri N. MARUDACHALAM: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் ஹரிஜன மாணவ, மாணவிகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டியது, 1960-ம் வருடம் நவம்பர் மாதம் 22-ந் தேதி வரையில் கொடுக்கப்படாததற்கு காரணம் என்ன?

The Hon. Sri P. KAKKAN: A statement [a] is placed on the table of the House.

Sri N. MARUDACHALAM: ஸார், இந்த மேஜை மீது வைத்திருக்கும் பேப்பரிலே, 8057-ல், நாலாம் வகுப்புக்கு இது வரை கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri P. KAKKAN: கனம் அங்கத்தினர் கேள்வியே விளங்கவில்லை.

[a] Printed as Appendix II on page 327 infra.